**தலைப்பு 308 - தபால் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1..1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு - 308 தபால் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தபால் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.
(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானம் பெறுவனவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தினால் வெளிநாட்டு தபால் நிருவாக நிறுவனத்திற்கு கணக்குகள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் மிளாய்வாண்டின் இறுதியில் அத்தபால் நிருவாக நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படாத நிலுவை வருமான மீதி ரூபா 126,877,470 ஆக இருந்ததுடன் அது 01 ஆண்டிலிருந்து 07 ஆண்டுகள் வரையான கால வீச்சில் பரந்திருந்தது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்படாத நிலுவை வருமானமாகக் கருதப்பட்ட வருமானங்கள் தற்பொழுது அங்கீகரித்த நிலுவை வருமானமாக எங்களுக்கு கிடைத்துள்ளது. அவ்வாறே முன்னைய ஆண்டுகளில் அங்கீகரிக்கப்படாத கணக்குகள் சம்பந்தமாக உரிய தபால் நிறுவனத்தினருக்கு தொடர்ச்சியான நினைவூட்டலின் மூலம் மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தி அறவிடப்பட்டு வருகின்றது. | வெளிநாட்டு தபால் நிருவாக நிறுவனம் வருமானத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஏசீஏ-1 வருமானக் கூற்றில் பணமாக மீளச் செலுத்துதல் ரூபா 38,014,372 மற்றும் பிழையை சரிசெய்தல் ரூபா 8,230,015 ஆக மீளச் செலுத்துதல்களின் மொத்தம் ரூபா 46,244,387 ஆக இருந்ததுடன் அதில் பணமாக மீளச் செலுத்துவதற்கான ரூபா 489,643 மற்றும் பிழையை சரிசெய்தல் ரூபா 6,957,315 தொகைக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | வருமானத்தில் மீளச் செலுத்துதல் மற்றும் பிழையை சரிசெய்வதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

**(ஆ) வருமானமற்ற பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 7.7 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது காசு மற்றும் குறுக்குப் பதிவுகள் ஆகிய இரண்டும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கிணங்க திணைக்கள ஏடுகளின் பிரகாரம் முற்பணங்களை அறவீடு செய்தல் ரூபா 757,965,259 மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 780,039,559 ஆக இருந்ததுடன் திணைக்களத்தினால் முற்பணத்தில் அறவீடு ரூபா 750,299,645 முற்பணக் கொடுப்பனவு ரூபா 772,373,945 மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது குறுக்குப் பதிவுக் கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கி காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டது என தயவாக தெரிவிக்கிறேன். | காசுப் பாய்ச்சல் கூற்றினை முறைப்படியாக தயாரித்தல் வேண்டும். |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்றுக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | அனுராதபுரம் மாவட்ட கணக்கு அலுவலகத்தில் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட ரூபா 2,123,825 தொகையான ஏனைய கடன் மீதி 2021 ஆம் ஆண்டின் போது நீக்கப்பட்டிருந்தும் அதற்குரிய கணக்கு பதிவுகள், ஆவணங்கள், கோவைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மாதாந்த சம்பளத்திலிருந்து அறவிட்டு தீர்த்துவைக்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்விற்குத் தேவையான கணக்கு பதிவுகளும் ஆவணங்களும் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் கடந்த ஆண்டின் போது பதிலாகக் காட்டப்பட்டிருந்தும் அத்தகவல்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுராதபுரம் மாவட்ட கணக்கு அலுவலகத்தில் ரூபா 2,123,825 ஏனைய கடன் மீதியினைத் தீர்த்துவைப்பதற்குரிய ஆவணங்களை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | கணக்காய்விற்கு தகவல்களை சரியாகச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ii) | களுத்துறை மாவட்ட கணக்கு அலுவலகத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 1,295,400 பெறுமதியான நிதி மோசடி வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதில் ரூபா 1,145,850 மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் திணைக்களத்தினால் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் | களுத்துறை மாவட்ட கணக்கு அலுவலகத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றுள்ள நிதி மோசடியில் இன்னும் அறவிடப்படாத மீதியான ரூபா 1,145,850 சம்பந்தமாக புலனாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கிறேன். | திணைக்களத்தினால் புலனாய்வ நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 57,810,684 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் கடன் மீதி ரூபா 20,799,130 ஆகும். | தபால் திணைக்கள அரசாங்க முற்பணங்கள் பீ கணக்கில் காணப்படுகின்ற மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட மற்றும் வேையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதியில் அறவீடு செய்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய சுற்றறிக்கை ஒழுங்குவிதிகள், அறிவுறுத்தல்கள் மற்றும் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான கடன் மீதிகள் சம்பந்தமாக அமைச்சு சட்ட உத்தியோகத்தரினைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கான அறிவுறத்தல்கள் மற்றும் முற்பணங்கள் பீ கணக்கின் நிலுவைக்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் பின்பற்றி இன்னும் அறவீடு செய்ய முடியாத கடன் மீதிகளைப் பதிவழிப்பதற்காக தொடர்புபடுத்துமாறு மாவட்ட நிருவாக உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிலுவைக்கடன் மீதி அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

**(ஈ) ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் சேதம் ஏற்பட்ட திகதி, சேதம் தொடர்பான விபரம், சேதம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அண்ணளவான பெறுமதி ஆகிய விடயங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நி.பி 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படவில்லை என தெரிவிக்கிறேன். | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நி.பி 85(1) மற்றும் நி.பி 85 (2) இல்லுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான மதிப்பீடு மற்றும் திருத்திய வருமான மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாகவும் சரியான முறையிலும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 28 வருமானத் தொகுதியின் சாதகமான முரண் ரூபா 160,046 இலிருந்து ரூபா 216,963,747 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் 21 வருமானத் தொகுதியின் பாதகமான முரண் ரூபா 107,625 இலிருந்து ரூபா 888,023,634 வரையான வீச்சில் காணப்பட்டது. | பாதகமான முரண் - வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தின் பெறுமதி அதிகரித்துச் செல்லல், பணவீக்க வீதம் அதிரித்தல், மின்சாரக் கட்டணம் அதிகரித்தல், வாகன தண்டப் பணங்களுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் அடிக்கடி அதிகரித்தல், முத்திரை விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முத்திரை கண்காட்சிகள், பொதுப் பாவனை வீழ்ச்சி, ஆளணியினரின் ஆக்கபூர்வமானதும் நம்பகரமானதுமான சேவைகள் என்பவற்றினால் அந்த எதிர்பார்த்த வருமானத்தினை விட வருமானம் அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளது. பாதகமான முரண் - ஒட்டுமொத்த முத்திரை வருமானத்தினையும் தபால் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்வதற்கான அங்கீகாரத்தினை வேண்டி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்படாமை மற்றும் சில தபால் சேவைகளுக்காக மாற்று வழிகளைப் பயன்படுத்துவதற்கு பாவனையாளர்கள் முன்வந்துள்ளமை என்பனவாகும். | வருமான மதிப்பீடானது நடைமுறைச்சாத்தியமாகவும் சரியான முறைமையிலும் தயாரித்தல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 சனவரி 27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரிவு இலக்கம் 02 (இ) (iii) இன் பிரகாரம் செலவு விடய குறியீடு 1002- மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தின சம்பளம் மற்றும் 1003 - ஏனைய படிகள் என்பவற்றிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினை ஆகக் குறைந்தது 06 சதவீதத்தினால் குறைக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது ஏனைய படிகளை 03 சதவீதத்தால் குறைத்து மற்றும் மேலதிக நேர வேலைப்படி விடுமுறை தினச் சம்பளத்திற்காக நிதிரப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | 15 தபால் அலுவலகங்கள் தொடர்ச்சியாக கள்வர்கள் உடைப்புக்கு உள்ளாகியிருந்ததுடன் அந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக 2023 செப்தெம்பர் மாதத்திலிருந்து 03 மாத காலத்திற்கு இரவு காவலாளிகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதனால் மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தினச் செலவு விடயத்திற்காக எதிர்பாராத செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளதனால் திணைக்களத்தில் தற்பொழுது நிரந்தர ஆளணியில் காணப்படுகின்ற 3723 இற்கு மேற்பட்ட வெற்றிடங்களின் அளவினையும் மேலதிக நேர வேலையின் மூலம் நிவர்த்தி செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதனாலும் வழங்கப்பட்டுள்ள நிதி எற்பாடு போதியளவில் இல்லாததன் மூலம் நி.பி 66 இன் கீழ் மாற்றுதல் மேற்கொளப்பட்டிருந்தது. | 2023 சனவரி 27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 02 (இ) (iii) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) 2022 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட ரூபா 1,459,584 தொகையான தீர்த்துவைக்கப்படாத கடப்பாடுகள் பொறுப்புக்களின் பெறுமதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். இந்த தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கணக்காய்விற்கு | அனைத்து பொறுப்புக்களையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கையிடப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | |
| (ii) | 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்த வேண்டிய படிவங்களில் காட்டப்பட்டுள்ள பின்னிணைப்பு (III) இன் பிரகாரம் மற்றும் 2023 நவம்பர் 01 ஆந் திகதிய 04/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 4.5 ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு புதிய சிகாஸ் இணைய தள பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் நி.பி 94 (3) இன் கீழ் ரூபா 170,781,353 சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக அவ்வாறு பதியப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என தெரிவிக்கிறேன். | 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மட்டகளப்பு மாவட்ட கணக்கு அலுவலகத்தினால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கபட்டுள்ள ரூபா 3,984,903 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக கணக்கீடு செய்யபப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | அனைத்து பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நி.பி 94(2)(3) இன் பிரகாரம் ரூபா 17,587,359 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவற்றில் ரூபா 7,747,689 பெறுமதி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | அனைத்து பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (v) | 2024 சனவரி மாத்திலிருந்து மார்ச் மாதம் வரையான கொடுப்பனவு வவுச்சர்களைப் பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்டவாறு திணைக்களத்தினால் ரூபா 1,207,698 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களுக்கு இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | அனைத்து பொர்றுப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 2.1, 3.1, 3.3., 3.5, 3.6 ஆகிய பிரிவுகள் மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | - | விரல் அடையாளமிடும் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தும் விரல் அடையாளமிடும் இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களை கவனித்துப் பார்க்காது பிற்பகல் 16.15 மணிக்கு தபால் தலைமையகத்திலிருந்து வெளிச்செல்லும் ஊழியர்கள் இரவு 7, 8, 9, 10 ஆகிய நேரங்களில் கடமை மேற்கொண்டதாக பிழையாகக் காட்டி ரூபா 57,919,684 தொகையான மேலதிக நேர வேலைப் படி திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக | தபால் திணைக்களத்தினால் தற்பொழுது காணப்படுகின்ற தபால் சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 1480 ஆகும். தபால் தலைமையகத்தில் தபால் சேவை உத்தியோகத்தர் பதவிகளில் 94 வெற்றிடங்கள் காணப்பட்டன. | தாபனக் கோவையிலுள்ள மேற்கூறிய ஒழுங்குவிதிகள் மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்ட மேலதிக நேர வேலைப்படி கொடுப்பனவுகளின் சரியான தன்மையை கணக்காய்வில் பரீட்சிக்க முடியாதிருந்தது. | | |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 1645 (ஆ) - | ஒவ்வொரு வாகனத்தின் சாரதியினால் 268 ஆவது பொது படிவத்தில் நாளாந்த ஓட்டல் அட்டவணையை வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யும் நிருவாக உத்தியோகத்தர்களினூடாக நாளாந்தம் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 216 வாகனங்களில் 59 வாகனங்கள் மீளாய்வாண்டின் எந்த மாதத்திலும் ஓட்ட அட்டவணையை சமர்ப்பித்திருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் 98 வாகனங்களின் பல மாதங்களுக்கான ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பாக பரீட்சிக்க முடியாதுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஓட்ட அட்டவணைகள் பேணப்படுதல் வேண்டும். |
| (iii) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை - | அரசாங்க வாகனங்களில் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட வேண்டிய போதிலும் தபால் திணைக்களத்தின் 123 வாகனங்களில் அரசாங்க இலச்சினை பூசப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களம் பயன்படுத்தும் வாகனங்களில் அரசாங்க |

| | | | |
|---|---|---|---|
| | | | இலச்சினை பூசப்படுதல் வேண்டும். |

## 2.5 வைப்பு மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | வங்கி கணக்கிணக்க கூற்றினைத் தயாரிக்கும் போது வழங்கப்பட்டு 06 மாதங்களை மிகைத்துச் சென்ற காசேலைகளின் பெறுமதியினை உரிய நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 263,500 பெறுமதியான ஒரு காசோலை 2022 ஆம் ஆண்டிலிருந்து பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. மேலும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 2,000 பெறுமதியான கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 03 காசேலைகளும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | இப்பணத்தை அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனைத்து வைப்புக்களையும் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 வரை வங்கி கணக்கிணக்க கூற்றில் இனங்காணப்படாத ரூபா 896,796 பெறுவனவுகள் அந்த ஆண்டின் போது இனங்காணப்பட்டு தீர்த்துவைக்கப்படாது 2022 ஆம் ஆண்டில் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அந்த மீதி 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. மேலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வங்கி கூற்றில் இனங்காணப்படாத ரூபா | வங்கி கணக்கிணக்க கூற்றின் இது பணப் பெறுவனவாக குறிப்பிடப்பட்டிருந்தும் அப்பெறுவனவினை இனங்காண்பது சிக்கலானதாக இருந்ததனால் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது டன் எதிர்காலத்தில் இனங்காணப்பட்ட உடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தயவாக தெரிவிக்கிறேன். | அனைத்து வைப்புக்களையும் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 149,990 பொறுவனவுகளை மீளாய்வாண்டின் போது இனங்கண்டு தீர்த்துவைக்கப்படாது பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன் அந்த மீதியும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் மூன்றாந் தரப்பினரர்களுக்காக மிண்டும் கொடுப்பனவு செய்வதற்காக நிறுத்திவைக்கப்பட்ட (13/39) வைப்பு பணம் ரூபா 5,875,138 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,104,880 பணம் 02 ஆண்டுகளை மிகைத்த வைப்பு பணம் ஆனதுடன் அது சம்பந்தமாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனத்தினால் வேண்டுதல் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததன ால் சம்பளத்திலிருந்து நிறுத்திவைத்த 20 சதவீத சனிக்கிழமை படியினை மீண்டும் உரிய உத்தியோகத்தர்களுக்குச் செலுத்துவதற்காக பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2021 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட 03 பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4,331,100 பெறுமதியான செயலாற்றல் பிணை முறியினைப் பெறுப்பேற்று அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | உரிய நிறுவனத்தினால் வேண்டுதல் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததன ால் மீண்டும் கொடுப்பனவு செய்யப்படவில்லை. வேண்டுதல் கடித்தினை சமர்ப்பித்ததன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | பெறுகை செயற்பாடுகள் முடிவடைந்திருக்குமாயி ன் மற்றும் நிறுவன வேண்டுதல் கடிதம் சமர்ப்பிக்கப்படவில்லை யாயின் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும். |
| (v) | சம்பளத்திலிருந்து அறவிட்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய ரூபா 202,971 தவணைப் பணம் சிலாபம் மாவட்ட கணக்கு அலுவலகத்தினால் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | 2024 சனவரி மாதம் ரூபா 179,050 தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுட ன் ரூபா 16,921 தொகையை எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய தவணைப் பணத்தினை தாமதமின்றி அனுப்புதல் வேண்டும். |
| (vi) | கண்டி மாவட்ட கணக்கு அலுவலகத்தில் ரூபா 460,000 தொகையான ஓய்வு இல்ல | ஓய்வு இல்லத்திற்கு பொறுப்பானவருக்கு சேவைகள் மற்றும் | அனைத்து வருமானத்தையும் சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம் திணைக்கள வருமானமாக இனங்காணப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டடிருந்தது. | வசதிகளுக்காக செலவு செய்வதற்குத் தேவைப்படுகையில் பொதுவைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்திலிருந்து தேவைப்பாடுகளுக்கு வழங்கப்படுவதுடன் அவ்வாறு செலவு செய்து மிகுதியான பணம் இரண்டு ஆண்டுகளின் இறுதியில் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படும்.எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலம் பூர்த்திசெய்ததன் பின்னர் இப்பணத்தை அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கனப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vii) | 2021 சனவரி 19 ஆந் திகதி மாத்தறை மாவட்ட கணக்கு அலுவலகத்திற்குரிய கும்புறுபிடிய தபால் அலுவலகத்தின் மதில் சுவரினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையின் போது உடைந்ததன் காரணமாக அதனைத் திருத்தம் செய்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 284,000 பெறுமதியானது மீளாய்வாண்டின் இறுதி வரை வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பொது வைப்புக் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | கும்புறுபிடிய தபால் அலுவலகத்தின் மதில் சுவரினை திருத்தம் செய்தல் வேண்டும். |
| (viii) | மாத்தறை மாவட்ட கணக்கு அலுவலகத்தினால் மீளாய்வாண்டின் போது ஊழியர்களுக்கு சம்பளத்தை செலுத்தும் போது அறவிடப்படுகின்ற உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 367,559 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குஅனுப்பிவைக்காது பொது வைப்புக் | உழைக்கும் போது செலுத்தும் வரியினை அறவிடும் போது இடம்பெற்ற தவறான கணிப்பீட்டினால் தற்பொழுது வரை பொதுவைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன் இது சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து | உழைக்கும் போதே செலுத்தும் வரியினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | எழுத்துமூலம் விசாரணை செய்யப்பட்டதுடன் அதற்காக பதில் கிடைத்த உடன் தீர்த்துவைப்பற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். |

## 2.6 வங்கி கணக்குகளைச் செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 10 மாவட்ட கணக்கு அலுவலகங்கள், மத்திய தபால் பரிமாற்று, முத்திரை அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தின் 16 வங்கி கணக்கிகளின் கொடுப்பனவுக்காகச் சமர்பிபிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த ரூபா 815,181 தொகையான காசோலைகளும், இனங்காணப்படாத ரூபா 12,923,311 கொடுப்பனவுகளும் மற்றும் இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 117,501,036 தொகையும் காணப்பட்டன. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகளுக்கும் இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதிக்குமிடையேயான வித்தியாசம் திணைக்கள வங்கி கணக்கிணக்க கூற்றினைப் பரீட்சித்த போது காணப்பட்டதுடன் அப்பெறுமதி விபரமாக பரீட்சிக்கப்படுமாயின் சரியான பதிலினை வழங்கியிருக்கலாம் என தயவாக தெரிவிக்கிறேன். | கொடுப்பனவிற்குச் சமர்பிபிக்கப்படாத காசோலைகள் சம்பந்தமாக நி.பி 396 (இ) இன் பிரகாரம் இனங்காணப்படாத கொடுப்பனவுகளையும் இனங்காணப்படாத பெறுவனவுகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தபால் திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கைக்கு இணங்க ஆண்டின் போது அமுல்ப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட முழுச் செயற்திட்டங்களின் | 01/2023 ஆம் இலக்க மற்றும் 02/2023 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் அரசாங்க செலவுகளை மேற்கொள்ளுதல் மட்டுத்தப்பட்டுத்தப்பட்டதனால் 2023 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கையான 347 செயற்திட்டங்களில் 169 செயற்திட்டங்கள் முடிவடைந்துள்ளது என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 178 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | திட்டத்தில் குறிப்பிட்ட 347 செயற்திட்டங்களில் 178 செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததனால் இரத்துச் செய்ய வேண்டி ஏற்பட்டது. | |
| (ஆ) | திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத 165 செயற்திட்டங்கள் 308-2-01-2001 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உரிய பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தேவைப்பாட்டின் அடிப்படையில் இனங்காணப்பட்டடிருந்ததனால் முன் அறிந்துகொள்ளலின் மூலம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததனால் உரிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தீணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் தலைமை அலுவலகத்தின் கீழ் 18 செயற்திட்டங்கள் காட்டப்பட்டிருந்ததுடன் அவற்றிற்கு ஏனைய மாகாணங்களின் 02 செயற்திட்டங்களான சுண்ணாகம் தபால் அலுவலகத்தின் திருத்த வேலைகளுக்கான அறிவுறுத்தல்களை வெளியிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 62,755 செலவும் மட்டகளப்பு தபால் அலுவலகத்தின் மின்சாரம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,049,525 செலவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கருத்துரை தரப்படவில்லை. | யெல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டின் போது கட்டிட திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பொலன்னறுவை தபால் அலுவலக கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் | கருத்துரை தரப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டங்த்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டாவது கட்டம் என்ற செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 50 மில்லியன் நிதி எற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 6,977,960 நிதிச் செலவு காட்டப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 04 சதவீதமாகும். | | |
| (உ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையில் Philatelic Bureau Module இனை அபிவிருத்தி செய்வதற்காக Colbert Software Solution (Pvt) Ltd இற்கு கொடுபபனவு செய்தல் என்ற செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டின் 04 ஆவது காலாண்டு வரை ரூபா 2,250,000 நிதிச் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 23 சதவீதமாகும். மேலும் செயற்திட்டத்திற்கான நிதி ஏற்பாடு குறிப்பிடப்படவில்லை. | பழைய கட்டிடத்தினை உடைத்து அகற்றி புதிய கட்டிடத்தினை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்படடுள்ள பணத்தில் ரூபா 6,977,960 பணத்தை செலவு செய்து ரூபா 43,022,040 பணம் மீண்டும் தபால் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அத்திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 4% ஆகும். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | செயலாற்றல் அறிக்கையில் மத்திய மாகாணத்திற்குரிய செயற்திட்டமான கண்டி தபால் அலுவலக கட்டிடத்தினை புனரமைப்பதற்கான தொழில்சார் வல்லுனர் பொறியியல் சேவை கட்டணம் என்ற செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 355,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 355,000 ஆக நிதி செயல்முன்னேற்றம் காட்டப்பட்டிருந்தும் பௌதீக செயல்முன்னேற்றம் காட்டப்பட்ருக்கவில்லை. | இச்செயற்திட்டதானது பூரணப்படுத்தப்பட்ட ஒரு செயற்திட்டம் என தயவாக தெரிவிக்கிறேன். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த உடன்படிக்கையின் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு தபால் அலுவலக கட்டிடத் தொகுதி நிர்மாணத்தை 2021 மார்ச் 12 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 05 சந்தர்ப்பங்களின் போது கால நீடிப்புச் செய்யப்பட்டிரந்தது. அதற்கிணங்க இந்த ஒப்பந்தம் 2023 நவம்பர் 30 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட வேண்டி இருந்தும் இந்த ஒப்பந்தம் 2024 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்தும் 2023 நவம்பர் 30 ஆந் திகதியிலிருந்து ஒப்பந்த காலத்தை நீடிப்புச் செய்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. | மட்டக்களப்பு தபால் அலுவலக கட்டிடத் தொகுதியினை திறக்கக்கூடிய காலம் மற்றும் இன்னும் அத்தியவசியமான நிர்மாணங்கள் தொடர்பாக தீர்மானிப்பதற்காக 2023 ஒக்தோபர் 16 ஆந் திகதி கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் அவதானிக்கப்பட்டன. அதற்கிணங்க அவதானிக்கப்பட்ட விடயங்கள் மேலதிக வேலையாக குறிப்பிடப்பட்டு துரிதமாக கட்டிடத்தின் வேலையை முடிவுறுத்துமாறு 2023 நவம்பர் 01 ஆந் திகதி பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதுடன் ஒப்பந்த காலம் 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டது. உங்களின் வசதிகளை தெரிந்துகொள்வதற்காக காலநீடிப்புச் செய்யப்பட்ட கடித்தின் பிரதியை இதனுடன் அனுப்பியுள்ளேன். | ஒப்பந்தத்தினை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மட்டக்களப்பு தபால் அலுவலக கட்டிடத் தொகுதியை உடைத்து அகற்றும் போது அகற்றப்பட்ட மரங்களும் ஓடுகளும் பிரதேச செயலகத்தின் மதிப்பீட்டாளரின் மூலம் ரூபா 39,375 ஆக மதிப்பீடு செய்யப்பட்டு 2022 யூலை 15 ஆந் திகதி மட்டக்களப்பு பிராந்திய தபால் | மட்டக்களப்பு தபால் அலுவலக கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் போது மதில் சுவரின் ஒரு மூலையில் நிர்மாணத்தினை மேற்கொள்வதற்கு அனுமதியை வழங்குவதற்கு முடியாது | மரங்கள் மற்றும் ஓடுகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்தியட்சகருக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த மரங்களும் ஓடுகளும் பட்டியல்படுத்தப்பட்டிருக்காததுடன் பொருட்கள் துருப்பிடித்து குவித்துவைக்கப்பட்டிருந்ததனால் தற்பொழுது மிகுதியாக உள்ள பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு 2023 செப்தெம்பர் 18 ஆந் திகதி ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தும் அந்த மரங்களும் ஓடுகளும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. | என வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வாய்மொழி மூலம் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க வீதி அபிவிருத்தி நடவடிக்கை இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையின்றி அகற்றும் அடிப்படையில் மட்டக்களப்பு தபால் அலுவலக கட்டிட தொகுதியின் முன்பக்க மதில் சுவரின் நிர்மாண வேலையை மேற்கொள்வதற்காக ஒரு கடிதம் 2023 நவம்பர் 02 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டது. அதற்கிணங்க அக்கடிதம் போதியளவானது எனவும் மீண்டும் நிர்மாணிப்பதற்காக அங்கீகாரத்தினை வழங்குவதற்கு கடிதம் அனுப்புவதில்லை எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்டது. மதில் சுவரின் மூலையில் ஒரு சிறிய பகுதியினை நிர்மாணிப்பதற்கு முடியாமல் போகுமாயின் அரசாங்க ஆதனத்தை பாதுகாக்க முடியாமல் போகும் என தெரிவிக்கிறேன். | |
| (இ) | மட்டக்களப்பு தபால் அலுவலக கட்டிட தொகுதியின் மதில் சுவரினை நிர்மாணிக்கும் போது எதிர்காலத்தில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கையில் இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளாது அகற்றும் அடிப்படையில் மதில் சுவரினை நிர்மாணித்ததன் காரணமாக அரசாங்கத்தின் பணம் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் கட்டிடத்தினை பயன்படுத்தக்கூடிய வகையில் அத்தியவசியமான வேலைப்பகுதிகளை இனங்காண்பதற்கு | நிர்மாண வேலைகளுக்காக உரிய நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| தேவையற்ற வகையில் செலவு செய்தலாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | கட்டிடத்தின் வெளிக்கள பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க இனங்காணப்பட்ட அத்தியவசியமான வேலைப்பகுதிகளை நிறைவேற்றுமாறு CECB நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. |

**3.3 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) Miniature Sheets of Sri Lanka (ISBN 978 - 955 - 9482 -13 - 0) கூற்றினை அச்சிடுதல் | | |
| (i) தபால் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது Miniature Sheets of Sri Lanka வெளியீட்டின் ஒரு பக்கம் ரூபா 4,860 வீதம் 500 பக்கங்கள் ரூபா 2,430,000 தொகைக்கு அச்சிடப்பட்டிருந்ததுடன் ஒரு வெியீட்டினை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள நினைவுச் சின்ன பத்திரங்களின் எண்ணிக்கை 118 ஆக இருந்ததனால் 500 வெளியீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள நினைவுச் சின்னங்களின் அளவு 59,000 ஆகும். ஒரு வெளியீட்டில் உள்ள நினைவுச் சின்ன பத்திரங்களின் பெறுமதி ரூபா 8,244 ஆக இருந்ததுடன் நினைவுச் சின்ன பத்திரங்களின் முழுச் செலவு ரூபா 4,122,125 ஆகும். இச்செலவுகளுக்கு மேலதிகமாக நினைவுச் சின்ன பத்திரங்களின் கைபிடிகளை கொள்வனவு செய்வதற்காக | கருத்துரை தரப்படவில்லை. | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை அறவீடு செய்வதற்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரீட்சிப்பு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 6415 யூரோக்கள் செலவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2024 மார்ச் 13 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது ரூபா 6,552,125 தொகை மற்றும் யூரோ 6,415 செலவு செய்து அச்சிடப்பட்ட எந்த வெளியீடும் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | அந்த வெளியீடு சீல்வைக்கப்பட்டு அலுமாரியில் களஞ்சியப்படுத்திவைக்கப்பட்டி ருந்ததுடன் அது தொடர்பாக பிரதான உள்ளகக் கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் அந்த அலுமாரியினுள் 482 வெளியீடுகள் இருந்தது எனவும் அதற்கிணங்க 18 வெளியீடுகளின் பற்றாக்குறை காணப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது. | கருத்துரை தரப்படவில்லை. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரீட்சித்தல் வேண்டும். |
| (iii) | Miniature Sheets of Sri Lanka இன் எந்த பிரதியும் 2024 மார்ச் 13 ஆந் திகதி வரை விற்பனை செய்யப்பட்டிருக்காததனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ரூபா 6,552,125 மற்றும் யூரோ 6,415 நட்டத்தை அறவீடு செய்வதற்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரீட்சிப்பு செய்யப்படவில்லை. | கருத்துரை தரப்படவில்லை. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரீட்சிப்பு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஏனைய | மீளாய்வாண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றின் | வித்தியாசத்திற்கான காரணம் தெளிவுபடுத்தப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதி ரூபா 415,360,915 ஆக இருந்த போதிலும் அதன் முன்னைய ஆண்டிற்கான இறுதி மீதி ரூபா 415,448,515 ஆகும். அதற்கிணங்க வித்தியாசம் ரூபா 87,6000 ஆகும். இந்த வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்படவில்லை. | ஆரம்ப மீதிக்கும் முன்னைய ஆண்டிற்கான இறுதி மீதிக்குமிடையே ரூபா 87,600 வித்தியாசம் 2024-01-01 ஆந் திகதி சரிசெய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | வேண்டும். |
| (ஆ) | நடைமுறை வேலைக் கணக்கிற்கு பதியப்பட வேண்டிய ரூபா 27,985,429 தொகையானது வதிவிடமற்ற கட்டிடங்கள் கணக்கிற்கு பதியப்பட்டிருந்தது. | நடைமுறை வேலை கணக்கிற்கு பதியப்பட வேண்டிய ரூபா 27,985,429 தொகை வதிவிடமற்ற கட்டிடங்கள் கணக்கிற்குப் பதியப்பட்டிருந்ததுடன் அது 2024 ஏப்ரல் கணக்குப் பொழிப்பின் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | கணக்கு குறைபாடுகள் சரிசெய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 896,711 தொகையான சொத்துக்களுக்கான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்களத்தினால் கணக்காய்விற்கு வழங்கிய பட்டோலையில் சில மாவட்ட கணக்கு அலுவலகம் தொடர்பான ஆரம்ப மீதிகளில் சில பிழையாக கொள்வனவாக காட்டப்பட்டுள்ளது. சரிசெய்யப்பட்ட பட்டோலையை சமர்ப்பிப்பேன். மீளாய்வாண்டின் போது கைதவிர்ப்புச் செய்யப்பட்ட ரூபா 11,295 பெறுமதிக்கான விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | சொத்துக்களுக்கான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி கட்டிடங்கள் அலுவலக உபகரணங்கள் தொடர்பாக திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைக்கும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் | கருத்துரைகள் தரப்படவில்லை. | வித்தியாசத்திற்கான காரணம் தெளிவுபடுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டுள்ள பெறுமதிக்குமிடையே வித்தியாசம் ரூபா 82,902,505 ஆகும். | | |
| (உ) | திணைக்களத்தினால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறைப்படியாக பொறுப்பேற்கப்படாத தபால் அலுவலகங்கள் 449 ஆகும். | 651 தபால் அலுவலகங்களில் 154 தபால் அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பேணப்பட்டு வருவதுடன் மிகுதியான 497 தபால் அலுவலகங்களில் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை தபால் திணைக்களத்திற்கு முறைப்படியாக பொறுப்பேற்கப்பட்ட தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை 104 ஆகும். பொறுப்பேற்கப்படாத மிகுதி தபால் அலுவலகங்களும் முறைப்படியாக பொறுப்பேற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள போதிலும் மதிப்பீடு செய்யப்படாத காணிகளின் அளவு 68 மற்றும் கட்டிடங்களின் அளவு 63 ஆகும். | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்பேற்கப்பட்டுள்ள போதிலும் மதிப்பீடு செய்யப்படாத காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக காணிகள் மற்றும் கட்டிடங்களின் திட்டம், காணியின் திட்ட வரைபடம், ஒப்படைப்பு சான்றிதழ், போன்ற ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக மதிப்பீடு செய்வதற்கு தாமதமடைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் துரிதமாக மதிப்பீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | மதிப்பீடு செய்யப்படாத காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவருதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் குறைவாக பயன்படுத்திய காணிகளின் அளவு 16 ஆகும். | அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வதன் கீழ் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்படாமையின் காரணமாக உடன்படிக்கையில் குறிப்பிட்ட 16 காணிகள் குறைவாகப் பயன்படுத்திக் காணப்பட்டது என தயவாக தெரிவிக்கிறேன். | குறைவாகப் பயன்படுத்திய காணிகளுக்காக நடவடிக்க எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத காணிகள் காணப்பட்டிருந்தும் வாடகை அடிப்படையில் 03 தபால் அலுவலகங்கள் பேணப்பட்டு வருகின்றன என அவதானிக்கப்பட்டது. | அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வதன் கீழ் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்படாமையின் காரணமாக முறைப்படியாக காணிப் பகுதிகளைப் பொறுப்பேற்று இருந்தும் இன்னும் உடன்படிக்கையில் குறிப்பிட்ட மூன்று அலுவலகங்களை வாடகை அடிப்படையில் பேண வேண்டி இருந்தது என தெரிவிக்கிறேன். | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத காணிகளை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | தபால் திணைக்களத்தினால் வாடகை செலுத்தி 154 தபால் அலுவலகங்களும் 2,280 உப தபால் அலுவலகங்களும் பேணப்பட்டு வந்திருந்தன. | கணக்காய்வு ஐய வினா சரியானது நாடு முழுவதும் 154 தபால் அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பேணப்பட்டு வருவதுடன் 2280 உப தபால் அலுவலகங்கள் உப தபால் அத்தியட்சகர்களினால் வாடகை செலுத்தி பேணப்பட்டு வருகின்றன என தயவாக தெரிவிக்கிறேன். | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத காணிகளை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மூடப்பட்டிருந்த உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை 29 ஆகும். | இந்த மூடப்பட்ட உப தபால் அலுவலகங்களை மூடிவைத்தல் இடம்பெறுவது தற்காலிகமாக என்பதுடன் அவ்வாறு மூடிவைப்பதற்கான காரணத்தை பின்வருமாறு | மூடப்பட்டிருந்த உப தபால் அலுவலகங்களை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கிறேன்.<br><br>(i) மிகவும் குறைந்த வருமானத்தைப் பெற்று பேணப்பட்டு வருகின்ற உப தபால் அலுவலகத்தை தொடர்ந்தும் பேணி திணைக்களம் மேற்கொள்ள வேண்டியுள்ள தேவையற்ற கிரயத்தினைக் குறைத்தல்.<br><br>(ii) வினைத்திறனாக வருமானத்தை உழைக்ககூடிய ஏனைய பிரதேசத்தில் மூடப்பட்டுள்ள உப தபால் அலுவலகத்தினை ஸ்தாபித்தல் | |
| (ஓ) | தபால் தலைமைகம் அமைந்துள்ள காணி, ஓல்கொட் மாவத்தையில் அமைந்துள்ள தபால் போக்குவரத்து பிரிவு அமைந்துள்ள காணி, நாரஹேன்பிட, அத்தியட்சகர் (வழங்கல்கள்) அலுவலகம் மற்றும் இயந்திர பொறியியல் பிரிவு அமைந்துள்ள காணி மத்திய தபால் பரிமாற்றல் பிரிவு அமைந்துள காணி மற்றும் சனாதிபதி மாவத்தையில் பிரதான தபால் அலுவலகம் அமைந்துள்ளள காணி என்பவற்றை 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தபால் திணைக்களத்திற்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சனாதிபதி மாவத்தையிலுள்ள பிரதான தபால் அலுவலகம் அமைந்துள்ள காணியைத் தவிர்த்து ஏனைய காணிகளுககாக முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது. சனாதிபதி மாவத்தையிலுள்ள பிரதான தபால் அலுவலகத்தை சனாதிபதி செயலகத்திற்கு ஒப்படைப்பதற்காக 2019 யூன் 13 ஆந் திகதி வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளதுடன் 2019 யூலை 09 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டுள்ளது. | பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | தபால் மா அதிபரின் பெயரில் பதிவுசெய்துள்ள வாகனங்கள், சம்பந்தமாக தபால் திணைக்களத்திடமிருந்தும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை ஒப்பிட்டுப்பார்த்த போது 42 வாகனங்கள் சம்பந்தமான தகவல்கள் திணைக்களத்திடம் இல்லாதிருந்ததுடன் 60 சிறீ 7256 ஆம் இலக்க பஸ் பயன்படுத்துவதிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட போதிலும் அதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தபால் மா அதிபரின் பெயரில் பதிவு செய்த 42 வாகங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து பார்ப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் மூலம் அது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 60 சிறீ 7256 ஆம் இலக்க பஸ் முத்திரை அலுவலகத்தின் காட்சிப்படுத்தல் வாகனமாக ஈடுபடுத்துவதற்காக திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | தபால் மா அதிபரின் பெயரில் பதிவுசெய்துள்ள அனைத்து வாகனங்களும் அடையாளம் காணப்படுதல் வேண்டும். பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்டுள்ள பஸ்களுக்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா 754,422 மீதி மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 12,527,541 மீதிகளின் மொத்த பெறுமதியான ரூபா 13,281,963 மீதியை இன்னும் அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. | இதில் உள்ளடக்கப்பட்ட பல நட்டங்கள் இடம்பெற்று 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் அந்த நட்டங்களில் பல கலவர காலத்தின் போது பயங்கரவாத செயற்பாடுகளின் காரணமாக இடம்பெற்றுள்ளதனால் புலனாய்வு அறிக்கை, பொலிஸ் அறிக்கை, உப அறிக்கை, வழக்கு அறிக்கை என்பவற்றை வழங்குவதிலுள்ள சிக்கல் மற்றும் சில நட்டங்கள் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்தல் போன்ற விடங்களின் காரணமாக உரிய பதிவழித்தல்களை மேற்கொள்ளும் தாமதத்திற்கு காரணமாக உள்ளது. ரூபா 2,477,444 | நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொகையான நட்டம் 2024 நிதி ஏற்பாட்டின் மூலம் பதிவழிக்கப்பட்டுள்ளது. நட்டங்கள் பதிவழிப்புச் செய்யப்பட்ட கோவைகள் சம்பந்தமான விபரம் கணக்காய்வுப் பிரிவிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தயவாக தெரிவிப்பதுடன் பதிவழிக்காது மிகுதியாக உள்ள நட்டங்களையும் இந்த ஆண்டுக்குள் பதிவழிப்பதற்கு அல்லது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஆ) | திணைக்களத்தின் வாகன விபத்து பதிவேட்டின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக 49 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளது என அவதானிக்கப்பட்டது. அந்த வாகன விபத்துக்களில் 13 விபத்துக்களுக்காக ரூபா 25,000 இனை விட குறைந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 10 வாகன விபத்துககளுக்குரிய வாகனங்கள் இயந்திர பொறியியல் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றது எனவும் 10 வாகன விபத்துக்களுக்குரிய வாகனங்கள் இயந்திர பொறியியல் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றது எனவும் நிதிக்கூற்றுக்களில் பட்டோலை 01 பட்டோலை 02 மற்றும் பட்டோலை 04 இல் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க 49 வாகன விபத்துக்களில் 16 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் சம்பந்தமான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 16 வாகனங்களுக்கு மத்தியில் LH -4017 ஆம் இலக்க வாகனம் உதிரிப் பாகங்கள் இல்லாததன் காரணமாக நட்டத்தை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தமை GS - 8329 ஆம் இலக்க வாகனம் மதிப்பீட்டு அங்கீகாரத்திற்காக அனுப்பிவைத்தல், GE-5935 ஆம் இலக்க வாகனத்திற்கான திருத்த வேலைகள் இலவசமாக மேற்கொள்ளப்படல், அவ்வாறே GE -5749 ஆம் இலக்க வாகனம் மற்றும் GS - 8373 ஆம் இலக்க வாகனத்தை திருத்தம் செய்வதற்காக வெளியே அங்கீகரித்த கராஜிற்கு அனுப்பிவைத்தல், LL - 8974 ஆம் இலக்க வாகனம் சிறிய விபத்து என்பதனால் இயந்திர பொறியியல் பிரிவினால் திருத்தம் செய்தல், அவ்வாறே PI-4542 ஆம் இலக்க வாகனத்தின் காப்புறுதியின் கீழ் திருத்தம் செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் நட்டங்கள் மற்றும் விட்டு விடுதல்கள் தொடர்பான கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மிகுதி வாகன விபத்துக்கள் நிதிக்கூற்றுக்களுக்கான தகவல்களை வழங்கும் சந்தர்ப்பம் வரை இயந்திர பொறியியல் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படவில்லை என தயவாக தெரிவிக்கிறேன்.<br><br>அதற்கிணங்க மேற்கூறிய விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் மேற்கூறிய விபத்துக்களை உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (இ) | திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்களின் கூற்றில் ரூபா 25,000 இற்கு குறைந்த நட்டங்களைப் பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்கு உள்ள நட்டங்களில் உள்ளடக்கப்பட்ட மொத்தமாக ரூபா 17,121 தொகையான நட்டங்கள் சேதங்களை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை பதிவழிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டிற்குரிய நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது நட்டத்தை பதிவழிப்பதற்கு முடியாதிருந்ததுடன் 2024 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நட்டம் பதிவழிகப்பட்டது. | அங்கீகாரத்தினைப் பெற்று நட்டத்தினை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் கூற்றில் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட நட்டங்களைப் பதிவழிப்பதற்கு அல்லது விட:டுவிடுவதற்கு உள்ள நட்டங்களில் உள்ளடக்கப்பட்ட மொத்தமாக ரூபா 1,928,583 தொகையான நட்டங்கள் சேதங்களைப் பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது | நட்டங்களைப் பதிவழிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது நட்டத்தை பதிவழிப்பதற்கு முடியாதிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் நிதி ஏஎற்பாட்டின் அடிப்படையில் நட்டம் பதிவழிக்கப்பட்டது. | அங்கீகாரம் கிடைத்த நட்டங்களைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 6,751,419 தொகையான டயர் டியூப், ரிம்டேப் என்பவைகளைக் கொள்வனவு செய்யும் போது மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் இரண்டிற்குமே செலவு செய்யப்பட்டிருந்ததுடன் நாரஹேன்பிட இயந்திர பொறியியல் பிரிவும் மீண்டுவரும் செலவு விடயங்களிலிருந்து ரூபா 266,373 செலவு செய்திருந்தது. இவ்வாறு செலவு விடயங்கள் பலவற்றிலிருந்து பணத்தை வழங்கியிருத்தல் கணக்காய்வில் சிக்கலுடையதாகும். | இதன் பின்னர் சரியான செலவு விடயங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | டயர், டியூப், ரிம் டேப் என்பவைகளை கொள்வனவு செய்வதற்காக ஒரு செலவு விடயத்திலிருந்து பணம் செலவு செய்யப்படுதல் வேண்டும் |
| (ஊ) | திணைக்களத்தினால் வருடாந்த தேவைப்பாடு தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது டியூப், ரிம்டேப், டயர்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் காரணமாக 2007 பெப்ரவரி 22 ஆந் திகதி கொள்வனவு செய்த 88 டியூப்கள் 78 ரிம்டேப்கள், மற்றும் 2010 மே 25 ஆந் திகதி கொள்வனவு செய்த 13 டயர்கள் 2023 நவம்பர் 16 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் காணப்பட்டன. | கருத்துரைகள் தரப்படவில்லை. | தேவைக்கேற்றவாறு கொள்வனவு செய்தல் வேண்டும். |
| (எ) | தபால் திணைக்களத்தின் வாகன விபத்து பதிவேட்டின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான வாகன விபத்துக்கள் முறையே 52, 67, 64, 47, 49 எண்ணிக்கையானவை இடம்பெற்றுள்ளன என அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 05 வாகனங்கள் ஆண்டின் போது பல தடவைகள் விபத்துக்குள்ளாகியிருந்தன. வாகன விபத்துக்கள் | கருத்துரைகள் தரப்படவில்லை. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரீட்சித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சம்பந்தமாக நிதிப்பிமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | ஒவ்வொரு வாகனத்திற்குமாக ஒவ்வொரு விபத்துக்கோவை ஆரம்பிக்கப்பட்டு அனைத்து விபத்துக்களும் போக்குவரத்துப் பிரிவிற்குப் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்துதல், பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்துதல், முழுமையான அறிக்கையை சமர்ப்பித்தல் என்பவற்றிற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படுமாயின் தொடக்க பரீட்சிப்பிற்காக குழுவினை நியமித்தல், தொடக்க பரீட்சிப்புக் குழுவின் அறிக்கை முழுமையான அறிக்கை, பழுதுபார்த்தல் செலவுகள் காப்புறுதியால் நிறைவுசெய்யப்பட்ட பணம், நட்டத்தின் பெறுமதி, அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு எடுத்த நடவடிக்கைகள் என்பவைகளை உள்ளடக்கிய பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி வாகன விபத்து பதிவேடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஐ) | 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்கள் சம்பந்தமான விபரம் கணக்காய்விற்கச் சமர்பபிக்கப்படவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | அரசாங்க கணக்குகள் குழுவின் தேவைப்பாடு என்பதனால் வாகன விபத்து சம்பந்தமான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மிட்சுபிசி வாகனத்தை பழுதுபார்ப்பதற்கான உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக் கருவிகனளை கொள்வனவு செய்வதற்காக பெறுமதி சேர் வரியுடனான பெறுமதி ரூபா 32,772,947 இற்கு வரையறுத்த யுனைடட் மோட்டர்ஸ் லங்கா தனியார் கம்பனிக்கு 2023 யூலை 26 ஆந் திகதி கேள்வி வழங்கப்பட்டிருந்தது. கேள்வி வழங்கல் கடித்தின் பிரகாரம் உதிரிப்பாகங்களும் துணைக்கருவிகளும் 2023 செப்தெம்பர் 23 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 திசெம்பர் 06 ஆந் திகதி வரையும் ரூபா 10,429,226 தொகையான உதிரிப்பாகங்களும் துணைக்கருவிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையும் உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக்கருவிகளில் சில ஒப்படைக்கப்பட்டிருக்கவில் லை. அப்போது நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமை மற்றும் பொருட்களை கப்பலில் ஏற்றுவதில் தாமதம் என்பவற்றின் காரணமாக உதிரிப்பாகங்களை வழங்குதல் தாமதித்தது என வழங்குதல் செய்யும் நிறுவனம் தெரியப்படுத்தியுள்ளது. | பணக்கொடுப்பனவிற்கு முன்னர் உதிரிப்பாகங்களும் துணைக்கருவிகளும் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெடம்பர் மாத்திலிருந்து 2023 யூலை மாதம் வரை தபால் தலைமையகத்தில் 81 சாரதிகளுக்கு 08 மாதங்களுக்கு ரூபா 13,653,606 தொகையான மேலதிக நேர வேலைகடப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அந்த மேலதிக நேர வேலைப் படி வவுச்சர் எதிலும் சாரதியினால் ஓடிய வாகனத்தின் இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்காததனால் இக்கொடுப்பனவின் சரியான தன்மையை கணக்காய்வில் பரீட்சிக்க முடியாதுள்ளது. | கருத்துரைகள் தரப்படவில்லை. | சாரதியின் மேலதிக நேர வேலைப்படி வவுச்சர்களில் வாகன இலக்கம் குறிப்பிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் 29 உத்தியோகத்தர்களுக்கு 2023 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலம் தொடர்பாக ரூபா 23,820,606 தொகையான முழுச் சம்பளம் மற்றும் ரூபா 6,963,794 தொகையான பிரயாணச் செலவுகளும் கூட்டிணைந்த படிகளுமாக முழு ஊதியம் ரூபா 30,484,400 செலுத்தப்பட்டிருந்தும் அந்த உத்தியோகத்ரத்கள் வழங்கிய கணக்காய்வு ஐய வினாக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது செலுத்திய ரூபா 30,484,400 தொகைக்குரிய போதியளவான கணக்காய்வு பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதா என்பது கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாகும். | 2019 பெப்ரவரி 05 ஆந் திகதி கணக்காய்வுத் திட்டத்தை தயாரிக்கும் போது வகைப்படுத்தப்பட்ட தபால் அலுவலகங்களை கணக்காய்வு செய்வதற்கான உச்ச அளவு காலம் மற்றும் கணக்காய்விற்காக பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்காய்வு ஒப்படைப்புக்கள் இடம்பெறுவதுடன் அதன் அடிப்படையில் உச்ச அளவு வினைத்திறனுடனும் ஆக்கபூர்மாகவும் உரிய கணக்காயவுவ நடவடிக்கைகளும் கணக்குகளின் பரீட்சிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிக்கையிடுகின்றேன். 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் செயலாற்றல் மதிப்பீட்டின் போது செயலாற்றல் அடையப்பெற்றுள்ளது என அறிக்கையிடுகின்றறேன். நிறைவேற்றப்படுள்ள கணக்காய்வு மற்றும் கணக்குகளின் பரீட்சிப்பு எண்ணிக்கை 87, அறவீடு செய்வதற்கு அறிக்கையிடப்பட்டுள்ள பற்றாக்குறைப் பெறுமதி ரூபா 5,826,773, அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ள, பிரதண விடயம் 609, விசேட புலனாய்விற்கு அனுப்பிவைக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் எண்ணிக்கை 28 உள்ளகக் கட்டுப்பாட்டினை சரிசெய்வதற்கு வழங்கப்பட்டுள்ள | செலுத்திய ஊதியங்களுக்கு போதியளவான வகையில் கணககாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆலோசனைகளின் எண்ணிக்கை 124, திணைக்களத்தின் வினைத்திறனையும் ஆக்கபூர்வ தன்மையையும் மேம்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகளின் எண்ணிக்கை 153 என்பனவாகும். | |
| (ஈ) | தபால் போக்குவரத்து பிரிவில் மற்றும் கட்டுப்பாட்டு (புலனாய்வு) பிரிவில் உள்ள ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லலினை பதிவு செய்வதற்காக 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் விரல் அடையாளமிடும் இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கவில்லை. விரல் அடையாளமிடும் இயந்திரம் பொருத்தப்படாமையின் காரணமாக மேலதிக நேர வேலைக் கொடுப்பனவினை பரீட்சிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளக்கூடிய பிரபல்யமான ஒரு சான்று கணக்காய்வினால் இழக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக செலுத்தப்பட்ட முறையே ரூபா 2,503,546 மற்றும் ரூபா 1,880,898 தொகையான மேலதிக நேர வேலைப் படிகளின் சரியான தன்மை சம்பந்தமாக புறக்கணிக்கமுடியாத ஐயப்பாடு காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | கருத்துரை தரப்படவில்லை. | 2009 ஏப்ரல் 16 அந் திகதிய 09/009 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1993 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தபால் திணைக்களத்தின் செயற்பாட்டு ஊழியர்கள் அல்லாத உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மற்றும் கட்டுப்பாட்டு (புலனாய்வு) பிரிவின் ஊழியர்களுக்காக 2023 ஆம் ஆண்டின் சனவரியிலிருந்து திசெம்பர் வரை முறையே ரூபா | தபால் திணைக்களத்தின் தபால் அலுவலக நடவடிக்கைகள் அனைத்து வார இறுதி விடுமுறை தினமான சனிக்கிழமை செயற்பாட்டு நடவடிக்கை இடம்பெறுவதுடன் அந்நாளில் அதிக அளவான கொடுக்கல் வாங்கல்களும் காசுப் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,250,677 மற்றும் ரூபா 183,804 தொகைகளான சனிக்கிழமை படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இப்படியினைச் செலுத்துவதற்காக திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | சுழற்சியும் இடம்பெறுகின்றது. அக்கொடுக்கல் வாங்கல்களும் காசும் காசுக்குச் சமமானவைகளும் சம்பந்தமாக திடீர் பரீட்சிப்புக்கள், புலனாய்வு, கணக்காய்வு மற்றும் மெய்மையாய்வு மேற்கொள்வதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு சனிக்கிழமை படியினைச் செலுத்துவதற்காக 1993 செப்தெம்பர் 08 ஆந் திகதிய அமைப/93/450/038 ஆம் இலக்க அமைச்சரவை திர்மானம் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | KC -5114 ஆம் இலக்க மோட்டார் வாகனம் 2022 திசெம்பர் 17 ஆந் திகதிய அத்தியட்சகர், மத்திய தபால் பரிமாற்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அத்திகதியில் உள்ளவாறான ஆரம்ப மயிலோ மீற்றர் 162179 ஆக பதியப்பட்டிருந்தது. இறுதி மயிலோ மீற்றர்163078 ஆக பதியப்பட்டிருந்ததுடன் 900 கிலோ மீற்றர் ஓடியது என்பதாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. இந்த வாகனம் 2023 சனவரி 24 ஆந் திகதி தொழில்நுட்ப பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் ஆரம்ப மயிலோ மீற்றர் 163078 ஆக பதியப்பட்டிருந்தது. இந்த வாகனம் இக்காலப்பகுதியில் 900 கிலோ மீற்றர் எந்த இடத்திற்கு பயணம் செய்தது வாகனத்தை பயன்படுத்திய உத்தியோகத்தர் யார், வாகனம் ஒவ்வொரு நாளும் பயன்படுத்திய தூரத்தின் அளவு, பயன்படுத்திய உத்தியோகத்தரின் கையொப்பம் முதலிய விபரம் தொடர்பாக பரீட்சிப்பதற்கு ஓட்ட குறிப்புக்களில் எந்த தகவலும் | அத்தகவல் 2024 ஏப்ரல் 26 ஆந் தகிதி உங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | ஓடிய 900 கிலோ மீற்றர் தொடர்பான பயணத்திற்குரிய விபரம் தெளிவாக கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதியப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த வாகனத்திற்கு இக்காலப்பகுதியில் ஈடுபடுத்திய எரிபொருள் தொடர்பாக எந்த பதிவும் இருக்கவில்லை. | | |
| (எ) | தபால் தலைமை அலுவலகத்தில் மற்றும் மத்திய தபால் பரிமாற்றலில் ஒரு மின்பிறப்பாக்கி வீதம் 02 மின்பிற்ப்பாக்கிகள் இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சில தினங்களில் தபால் தலைமையகத்தின் மின்பிறப்பாக்கிக்காக 1200 லீற்றர் டீசலும் மத்திய தபால் பரிமாற்றின் மின்பிறப்பாக்கிக்காக 1,000 லீற்றர் டீசல்களும் வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் மின்வெட்டு இடம்பெறாத காலத்தில் இவ்வாறு டீசல் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்துரைகள் தரப்படவில்லை. | தேவைப்பாட்டிற்கு இணங்க டீசல் கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | திணைக்களத்தினால் வாகனங்களுக்காக எரிபொருளை வழங்குதல், ஓட்ட அட்டவணைகளில் பயணம் தொடர்பான பதிவுகளைப் பேணும் நடவடிக்கைகளில் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என கணக்காய்வினால் பரீட்சித்த 05 சந்தர்ப்பங்களின் போது அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் தரப்படவில்லை. | வாகனங்களுக்காக எரிபொருட்களை வழங்கும் உள்ளகக் கட்டுப்பாட்டினை மேம்படுத்துதல் வேண்டும். |
| (ஐ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்திருக்காத தொடக்க புலனாய்வு, முடிவடைந்திருக்காத நி.பி 104 பரீட்சிப்புக்கள், முடிவடைந்திருக்காத முறையான ஒழுக்காற்று பரீட்சிப்புக்கள் ஆகிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக அதன் செயலாற்றலினைப் | கருத்துரைகள் தரப்படவில்லை. | தொடக்க புலனாய்வு முடிவயையாத நி.பி 104 பரீட்சிப்பு மற்றும் முடிவடையாத முறையான ஒழுக்காற்று பரீட்சிப்புக்கள் தொடர்பான தகவல்கள் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் கணக்காய்விற்குச் |

| | | | |
|---|---|---|---|
| | பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. கட்டுப்பாட்டிற்கு (புலனாய்வு) வாய்மொழி மூலம், எழுத்துமூலம் மற்றும் 03 ஞாபகப்படுத்தல்களின் மூலம் தகவல்கள் வேண்டப்பட்டிருந்தும் எந்த தகவலும் கட்டுப்பாட்டாளரினால் (புலனாய்வு) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | சமர்ப்பித்தல் வேண்டும். |
| **(ஓ)** | **நாரஹேன்பிடி இயந்திர பொறியியல் பிரிவு** | | |
| | (i) 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளுக்குள் நாரஹேன்பிடி இயந்திர பொறியியல் பிரிவிற்கு உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் செலவு ரூபா 163,921,429 தொகையும், சம்பளம் 103,476,902 தொகையும் மேலதிக நேர வேலை ரூபா 37,303,888 தொகையும் ஆக மொத்தமாக ரூபா 304,702,219 செலவு செய்யப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் எத்தனை வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டது ஒவ்வொரு வாகனத்திற்கும் ஈடுபடுத்தப்பட்ட உதிரிப்பாகங்கள், டயர், டியூப் மற்றும் பெற்றரிகள் முதலிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் அதற்கிணங்க ரூபா 304,702,219 செலவுகளின் நியாயமான தன்மை தொடர்பாக எந்த கணக்காய்வு பரீட்சிப்பும் மேற்கொள்ள முடியாதுள்ளது. | கருத்துரைகள் தரப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை பழுதுபார்ப்புச் செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான விபரம் மற்றும் ஈடுபடுத்திய உதிரிப்பாகங்கள் தனித்தனியாக சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை பழுதுபார்ப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்ட வேலை கட்டளைப் பத்திரம் முறைப்படியாக சமர்ப்பிக்கப்படாதிருந்தது டன் 2017 ஆம் ஆண்டு தொடர்பாக 113 வேலை கட்டளைப் பத்திரங்கள் குறைவாகவும், 2018 ஆம் ஆண்டு தொடர்பாக 954 வேலைக் கட்டளைப் பத்திரங்கள் குறைவாகவும் 2019 ஆம் ஆண்டு தொடர்பாக 354 வேலைக் கட்டளைப் பத்திரங்கள் குறைவாகவும் 2021 ஆம் ஆண்டு தொடர்பாக 851 வேலைக் கட்டளைப் பத்திரங்கள் குறைவாகவும் 2022 ஆம் ஆண்டு தொடர்பாக 993 வேலைக் கட்டளைப் பத்திரங்கள் குறைவாகவும் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக 383 வேலைக் கட்டளைப் பத்திரங்கள் குறைவாகவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் எநத வேலைக் கட்டளைப் பத்திரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | வேலைக் கட்டளைப் பத்திரங்கள் பற்றாக்குறை இல்லாது கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | வேலை கட்டளைப் பத்திரங்களில் வாகனங்களுக்கு ஈடுபடுத்திய உதிரிப்பாகங்களை | கருத்துரைகள் தரப்படவில்லை. | வாகனத்தின் இலக்கத்துடன் ஈடுபடுத்திய உதிரிப்பாகங்களை இனங்காணக்கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணக்கூடிய வகையில் பதிவு செய்யப்பட்டிருக்காமை, சம்பவக் குறிப்பு புத்தகங்களில் ஈடுபடுத்திய உதிரிப்பாகங்களை தெளிவாக பதிவு செய்தல், கணனிமயப்படுத்தப்பட்ட பொருள் இருப்பு பதிவேட்டினை பேணாதிருத்தல் மற்றும் கைகளால் எழுதிய பொருள் இருப்பு பதிவேட்டினை தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் பராமரிக்காமையின் காரணமாக ஈடுபடுத்திய உதிரிப்பாகங்கள் தொடர்பாக கணக்காய்வு பரீட்சிப்பு மேற்கொள்ள முடியாதுள்ளது. | | வகையில் கணனிமயப்படுத்திய பொருள் இருப்பு பதிவேட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை அமுல்படுத்தப்படாமை யின் காரணமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கலின் காரணமாக இறக்குமதி தடைசெய்யப்பட்ட அதிக பெறுமதியினைக் கொண்ட சரியான உதிரிப்பாகங்களின் பாதுகாப்பு பற்றி கணக்காய்வு செய்வது பிரச்சினைக்குரியதாகும். | கருத்துரைகள் தரப்படவில்லை. | வாகனங்களின் உதிரிப்பாகங்களை பாதுகாப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (v) | 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 304,702,219 செலவு செய்து நாரஹேன்பிட இயந்திர பொறியியல் பிரிவு | கருத்துரைகள் தரப்படவில்லை. | நாறஹேன்பிட இயந்திர பொறியியல் பிரிவு காணப்பட்டிருந்தும் வெளி கராஜ்களில் வாகனங்களை பழுதுபார்ப்பதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | பேணப்பட்டிருந்தும் 183 வாகனங்கள் வெளி கராஜ்களில் பழுதுபார்ப்பதற்கு ரூபா 32,198,480 செலவு செய்யப்பட்டிருந்தது. | | காரணத்தை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். |
| (vi) | கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 16 ஆந் வகலை முடிவுறுத்தப்படாத 40 வேலைக் கட்டளைகள் இயந்திர பொறியியல் பிரிவில் காணப்பட்டதுடன் அவற்றில் 23 கட்டளைகளின் கால வீச்சு 03 மாதங்களிலிருந்து 06 ஆண்டுகள் வரை பரந்திருந்தது. | கருத்துரைகள் தரப்படவில்லை. | தாமதமின்றி வாகனங்கள் பழுதுபார்க்கப்படுதல் வேண்டும். |
| (vii) | 2023 நவம்பர் 16 ஆந் திகதிமேற்கொள்ளப்பட்ட நாரஹேன்பிட இயந்திர பொறியியல் பிரிவு பௌதீக பரீட்சிப்பின் போது பழுதுபார்ப்பதற்காக வைக்கப்பட்டுள்ள 17 வாகனங்களக்கான வேலைக் கட்டளைப் பத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | வேலைக் கட்டளைப் பத்திரங்களை கணக்காய்விற்கு முறைப்படியாக சமர்ப்பித்தல் வேண்டும். |
| (viii) | 2023 நவம்பர் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது 57-5226 ஆம் இலக்க வாகனம் பழுதுபார்ப்பதற்காக இயந்திர பொறியியல் பிரிவில் வைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த வாகனம் திணைக்களத்தின் | கருத்துரைகள் தரப்படவில்லை. | திணைக்களத்தின் வாகனம் மாத்திரம் இயந்திர பொறியியல் பிரிவில் பழுதுபார்க்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனம் அல்ல என கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திணைக்களத்தின் வாகன பதிவேட்டின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. | | |
| (ix) | இயந்திர பொறியியல் பிரிவில் வாகனங்கள் துருப்பிடித்துக் காணப்படுகின்றது எனவும் சில வாகனங்களின் பொடி பாகம் மாத்திரம் காணப்பட்டது. அந்த வாகனங்களின் உள்பாகங்களும் ஆசனங்களும் அகற்றப்பட்டிருந்தன. அகற்றப்பட்ட உதிரிப்பாகங்களை அடையாளம் காண்பதற்காக தனித்தனியாக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அரசாங்கத்தின் ஆதனங்கள் சிக்கனமாக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த வாகனங்களின் உதிரிப்பாகங்களின் பாதகாப்பு கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாகும். | கருத்துரைகள் தரப்படவில்லை. | அரசாங்கத்தின் ஆதனங்கள் சிக்கனமாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (x) | நாரஹேன்பிட இயந்திர பொறியியல் பிரிவினால் தீணைக்களத்திற்குரியதல்லாத 06 வாகனங்கள் 07 சந்தர்ப்பங்களின் போது பழுதுபார்க்கப்பட்டிருந்தது என கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திணைக்களத்தின் | கருத்துரைகள் தரப்படவில்லை. | திணைக்களத்தின் வாகனங்கள் மாத்திரம் இயந்திர பொறியியல் பிரிவில் பழுதுபார்க்கப்படுதல் வேண்டும். |

வாகன பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. இதற்காக மேற்கொண்ட செலவுகளை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அறவிட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாட்சி

### 4.1 பொது மக்களுக்கான சேவையை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தபால் திணைக்களத்திற்காக தயாரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ இணைய தளத்தினை பரீட்சித்த போது அந்த இணைய தளத்தில் பொது மக்களின் தேவைப்பாடுகள், திணைக்களம் தொடர்பான குறைபாடுகள் அல்லது பராட்டுக்களை வெளியிடுவதற்கு தேவையான வசதிகள் வழங்கப்படவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | நாளதுவரையாக பேணப்படுகின்ற இணைய தளம் உள்ளது எனவும் அதில் நுழையும் கதவு URL: https//:Slpost.gov.lk எனவும் பொதுமக்களுக்கான அனைத்து தகவல்களும் இணைய தளத்தில் உள்ளது எனவும் குறைபாடுகள் அல்லது பாராட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன். | தேவையான வசதிகளைக் கொண்ட உத்தியோகபூர்வ இணையதளம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தபால் திணைக்களத்தினால் தகவல்களை தெரிந்துகொள்ளும் செயற்பாட்டிற்காக ஒரு உத்தியொகத்தர் நியமிக்கப்பட்டிருந்தும் அந்த உத்தியோகத்தரிடம் திணைக்களத்தின் அத்தியவசியமான தகவல்கள் இருக்கவில்லை என | தகவல்களை தெரிந்துகொள்ளும் உரிமை தொடர்பான அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் தாம் பொது அதிகாரசபைக்கு முன்வைக்கின்ற தகவல் வேண்டுதல்களுக்கான தகவல்களை வழங்குதல் | தபால் திணைக்களத்தின் அனைத்து தகவல்களும் தகவல்களை தெரிந்துகொள்ளும் உத்தியோகத்தரிடம் இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வில் அவதானிக்கப்பட்டத. நாடு முழுவதும் அமைந்துள்ள பிரதி தபால் மா அதிபர் அலுவலகங்களின் பிரதி தபால் மா அதிபர்கள் தொடர்பான விபரம், மாவட்ட கட்டுப்பாட்டு அலுவலகங்களில் மாவட்ட கணக்காளர்கள் தொடர்பான விபரம், பிராந்திய தபால் அத்தியட்சகர் அலுவலக்களில் பிராந்திய தபால் அத்தியட்சகர்கள் தொடர்பான விபரம் என்பவற்றை உதாரணமாக காட்டலாம். | மற்றும் அவ்வாறான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரசைக்கு தேவையான அனைத்து உதவியையும் பெற்றுக்கொள்ளுதல் தகவல் உத்தியொகத்தரின் மூலம் வழங்கப்படுவதுடன் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான தகவல்கள் தபால் தலைமையகத்தின் கட்டுப்பாட்டுப் பிரிவின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (இ) | பொதுமக்களின் சேவையை நிறைவேற்றுவதற்காக பொதுமக்கள் முறைப்பாட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் அதற்குப் பதிலாக 2017 இலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை கிடைத்த முறைப்பாடுகளாகக் குறிப்பிட்ட சில கடிதங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. | பொதுமக்களால் மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றலினை ஆவணப்படுத்துதல் மற்றும் அந்த முறைப்பாடுகள் சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் காட்டும் பதிவேட்டினைப் பேணுதல் இடம்பெற்றிருக்காததுடன் பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் தகவல்களை விசாரிப்பதற்காக 1950 தொலைபேசி இலக்கமும் அத்திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன். | பொதுமக்கள் முறைப்பாட்டுப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஈ) | கதவல்களை தெரிந்துகொள்ளும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பொதுமக்கள்/ ஏனைய வேண்டுகின்ற தரப்பினர்களால் வேண்டப்படுகின்ற தகவல்களானது அவற்றினை வழங்குதல் மற்றும் வழங்காமைக்கான காரணத்தை உள்ளடக்கி ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | தகவல்களை தெரிந்துகொள்ளும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பொதுமக்கள் ஏனைய தரப்பினர்களால் வேண்டப்படுகின்ற தகவல்களைப் பதிவசெய்வதற்காக RTI 03 பதிவேடும் அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுதல்களை நிராகரிக்கும் போது | தகவல்களை தெரிந்துகொள்ளும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆவணப்படுத்துவதற்காக RTI 11 பதிவேடும் பேணப்பட்டு வருகின்றது. | |
| (உ) | பொதுமக்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் ஆவணப்படுத்துதல், அம்முறைப்பாடுகள் சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் காட்டும் ஒரு பதிவேட்டினை நாளதுவரையாக பேணுதல் செய்யப்பட்டிருக்கவில்லை. | பொதுமக்களினால் செய்யப்படுகின்ற முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், ஆவணப்படுத்துதல் மற்றும் அந்த முறைப்பாடுகள் சம்பந்தமாக எடுக்கப்பட்டுள நடவடிக்கைகளைக் காட்டும் ஒரு பதிவேட்டினை பேணுதல் இடம்பெற்றிருக்காததுடன் பொதுமக்கள் முறைப்பாடு செய்வதற்கு தகவல்களை விசாரிப்பதற்காக 1950 தொலைபேசி இலக்கம் இத்திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவும் தெரிவிக்கிறேன். | பொதுமக்கள் முறைப்பாட்டுப் பதிவேட்டினை நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |

## 5. மனிதவளங்கள் முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரித்த ஆளணியினர் மற்றும் உள்ளபடியான ஆளணியினர்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | திணைக்களமயப்படுத்தப்பட்ட பிரதி தபால் மா அதிபர் பதவிக்காக திறைசேரினால் அங்கீகரித்த ஆளணியினர்களின் எண்ணிக்கை 09 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான ஆளணியினர் 11 ஆக இருந்ததனால் அங்கீகரித்த ஆளணியினரை மிகைத்து 02 பிரதி தபால் மா அதிபர் பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளக்கட்டிருந்தன. தீறைசேரியினால் அங்கீகரித்த பிரதி தபால் மா அதிபர் பதவிகள் 2020 சனவரி 09 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட்டிருந்தும் எந்த அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்படாது 2021 | தபால் திணைக்களத்தின் அங்கீகரித்த பிரதி தபால் மா அதிபர்களின் எண்ணிக்கை 13 ஆனதுடன் அவற்றில் 04 பதவிகள் இலங்கை நிருவாக சேவையிலுள்ள பதவிகளின் மூலம் நிரப்புதல் இடம்பெறுகின்றது. அதற்கிணங்க திணைக்களமயப்படுத்தப்பட்டது 09 பதவிகளாகும். திணைக்களத்திலிருந்து பிரதி தபால் மா அதிபர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படுவதாவது | திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்த ஊழியர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்கப்படுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 11 மற்றும் 2022 எப்ரல் 27 ஆந் திகதிகளில் திணைக்களமயப்படுத்தப்பட்ட பிரதி தபால் மா அதிபர் பதவிகளுக்கு இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | நிறைவேற்று தரம் II இல் தேவையான தகமைகளை பூரணப்படுத்தியதன் பின்னராகும். 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் அடிப்படையில் பிரதி தபால் மா அதிபர் பதவிகளுக்காக 02 உத்தியோகத்தர்கள் தகமை பெற்றிருந்தனர். வெற்றிடமான 02 பதவிகளுக்காக இலங்கை நிருவாக சேவையிலுள்ள பதவிகளுக்கு தகமைபெற்ற உத்தியோகத்ர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படாததனால் அந்த 02 பதவிகளுக்காக திணைக்களத்தின் தகமைபெற்ற உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த வேண்டியிருந்தது. அதற்கிணங்க பதவிகளின் எண்ணிக்கை 11 ஆக உள்ளது என சுட்டிக்காட்டுகின்றேன். | |
| (ஆ) | திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 27,372 ஆக இருந்தபோதிலும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 21,459 ஆகும். அதற்கிணங்க முழு வெற்றிடங்களின் எண்ணிக்கை 5,913 ஆகும். 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய தரங்கள் மற்றும் சேவைகளில் 3,660 வெற்றிடங்களும் சிரேஷ்ட மட்டத்திலுள்ள சேவைகளில் 63 வெற்றிடங்களும் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை முடியாதிருந்தது. | தபால் சேவை உத்தியோகத்தர்கள் பதவிகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 415 உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் முதலாவது கட்டத்தின் கீழ் தகமைபெற்ற 218 நபர்களைச் சேர்த்துக்கொள்ளல் இடம்பெற்றது. மிகுதியான எண்ணிக்கையை சேர்த:தக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சையை நடாத்துவதற்கு | திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரரித்த ஊழியர் எண்ணிக்கை திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். |

தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றது அவ்வாறே உதவி தபால் அத்தியட்சகர் (பிரதான தபால் அலுவலகம்) பதவிகளுக்காக 38 நபர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைக்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்து பணிப்பாளர் நாயகத்தின் கடித்தின் பிரகாரம் உதவி தபால் அத்தியட்சகர் பதவிகளின் எண்ணிக்கையை 106 இனால் அதிகரிப்பதற்கு வழங்கிய அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் உதவி தபால் அத்தியட்சகர் (கணக்குகள் பரீட்சிப்பு) மற்றும் உதவி தபால் அத்தியட்சகர் (புலனாய்வு) பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.